30 years of CAG
Citizen consumer and civic Action Group

# இடமாறிய வாழ்க்கையும், விதிமாறிய கல்வியும்!



எழில் நகர் மற்றும் சுனாமி நகரில் மறுகுடியமர்வானது குழந்தைகளின்
கல்வி தொடர்ச்சியில் ஏற்படுத்திய தாக்கம் குறித்த ஆய்வறிக்கை.

**அறிமுகம்:**

நகரின் மையப் பகுதியிலிருந்து புறநகர்ப் பகுதிகளுக்கு ஏழை மக்கள் மறு குடியமர்வு செய்யப்படுவது அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் நகராட்சி சேவைகளைப் பெறுவதில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல், குழந்தைகளின் கல்வியிலும் பாதிப்பு ஏற்படுகிறது.

கண்ணகி நகர் மற்றும் செம்மஞ்சேரி பகுதிகளில் மறு குடியமர்வு செய்யப்பட்ட குடும்பங்களில் உள்ள குழந்தைகளின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளது என்று முந்தைய அறிக்கைகள் கூறுகின்றன. உதாரணமாக, குடியிருப்பு மற்றும் நில உரிமைகள் நெட்வொர்க் (ஹெச்.எல்.ஆர்.என்) மற்றும் பின்தங்கிய நகர்ப்புற சமூகத்திற்கான தகவல் மற்றும் ஆதாரவள மையம் (ஐ.ஆர்.சி.டி.யு.சி.- IRCDUC) ஆகிய அமைப்புகள் நடத்திய ஆய்வில் 5-18 வயதுள்ள 413 பேரில் 35% குழந்தைகள் பள்ளிப் படிப்பைப் பாதியிலேயே நிறுத்தியதற்கு அவர்கள் கண்ணகி நகரில் மறு குடியமர்வு செய்யப்பட்டது முக்கிய காரணங்களில் ஒன்று எனக் கண்டறிந்துள்ளன. சிவில் உரிமைகளுக்கான மக்கள் ஒன்றியம் (பி.யு.சி.எல்.) மற்றும் பிராக்சிஸ் (இணைப்பு 1) நடத்திய ஆய்வு அறிக்கைகளும் இதையே எதிரொலிக்கின்றன.

2015 நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் சென்னை நகரம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிறகு தமிழக அரசு நதிக் கரைகளில் வாழும் குடும்பங்களை அங்கிருந்து வெளியேற்றி அவர்களை பெரும்பாக்கத்தில் உள்ள எழில் நகரில் குடியேற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ளது. வெள்ளம் பாதிக்கப்பட்டதன் விளைவாகவே இந்த வெளியேற்றங்கள் நிகழ்வதால் இவை திடீரென்றும் முன்கூட்டியே திட்டமிடப்படாமலும் நடைபெறுகின்றன. இதன் விளைவாக, இந்தப் பகுதி குழந்தைகளின் கல்வியின் தொடர்ச்சி பாதிக்கப்படவுள்ளது. இதுதான் எங்களை இந்த ஆய்வு மேற்கொள்ளத் தூண்டியது.

இந்த விரிவான ஆய்வு புதிதாக கட்டப்பட்ட மற்றும் ஏற்கெனவே மறு குடியமர்வு நடைபெற்றுள்ள எழில் நகர் மற்றும் சுனாமி நகரில் உள்ள பள்ளி செல்லும் குழந்தைகளின் கல்வி நிலவரத்தை விசாரிக்க முயன்றுள்ளது. இந்த ஆய்வில் முக்கியமாக எழுந்துள்ள கேள்வி: குடும்பங்களின் மறு குடியமர்வு எந்த அளவிற்கு இந்தக் குழந்தைகளின் பள்ளிக் கல்வியின் தொடர்ச்சியை பாதித்துள்ளது?

மறு குடியமர்வு காலனிகளில் வந்து குடியேறிய பிறகு, குடிசைப் பகுதிகளில் பள்ளிக்கு சென்று கொண்டிருந்த 135 பேரில் 14% குழந்தைகள் பள்ளி செல்வதை நிறுத்தி விட்டனர் என்று ஆய்வில் கண்டறியப்பட்டது. மேலும் 115 பள்ளி செல்லும் குழந்தைகளில் பாதி பேர் எழில் நகர் மற்றும் சுனாமி நகருக்கு வந்து குடியேறுவதற்கு முன் தாங்கள் ஏற்கெனவே படித்துக்கொண்டிருந்த பள்ளிகளுக்கேச் செல்கின்றனர். மறு குடியமர்வு காலனிகள் உள்ள குழந்தைகளின் பெற்றோர்களும், பல அரசு சாரா தன்னார்வ அமைப்புகளும், போதுமான

எண்ணிக்கையில் தரமான கல்வி உள்கட்டமைப்பு தேவை என்பதை அவ்வப்போது வலியுறுத்தி வந்தாலும், இந்த உள்கட்டமைப்பு வசதி இன்னமும் வழங்கப்பட வில்லை.

**மறு குடியமர்வு குடியேற்றங்கள் குறித்து:**

ஒக்கியம் துரைப்பாக்கத்தில் உள்ள எழில்நகர் மற்றும் சுனாமி நகர் மறு குடியமர்வு குடியிருப்புகள் நகரின் புறநகர்ப்பகுதிகளில் உள்ளன. இரண்டு காலனிகளுமே 2013-ல் கட்டப்பட்டன. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் கொள்கை ஆவணங்களின்படி "ஆட்சேபணைக்குரிய பகுதிகளில்" குடியிருப்பவர்களை மறு குடியமர்வு செய்வதற்காக இந்தக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

எழில் நகரில் 228.60 கோடி ரூபாய் மதிப்பில் 6000 குடியிருப்புகளை ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கட்டியுள்ளது. சுனாமி நகரில் 106.11 கோடி ரூபாய் மதிப்பில் 2,048 குடியிருப்புகளை உலக வங்கியின் சுனாமி பேரிடர் மறுசீரமைப்பு ஆதரவு திட்டத்தின் உதவியுடன் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் கட்டியுள்ளது. அரசு ஆவணங்களின்படி இந்தக் குடியிருப்புகளில் உள்ள ஒவ்வொரு வீடும் 250 முதல் 357 சதுர அடி வரை உள்ளன. அரசு சாரா அமைப்பான சி.ஏ.ஜி. வெளியிட்ட ஒரு அறிக்கையில் எழில் நகர் மற்றும் சுனாமி காலனிகளில் நகர் 2015, மே மாதம் 2,650 குடும்பங்கள் குடியேறியுள்ளதாக தெரிவித்துள்ளது. தமிழக அரசு தற்போது மீதமுள்ள இந்த எழிழ் நகர் மற்றும் சுனாமி நகர் குடியிருப்புகளில் 2015 டிசம்பர் மாதம் சென்னை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஒதுக்கி வருகிறது.

**அட்டவணை 1: எழில் நகர் மற்றும் சுனாமி நகருக்கு மக்கள் மறு குடியமர்வு செய்யப்பட்ட திட்டங்கள்**

| **மறு குடியமர்வு குடியிருப்பின் பெயர்** | **திட்டத்தின் பெயர்** | **வருடம்** | **ஒதுக்கப்பட்டுள்ள குடியிருப்புகளின் எண்ணிக்கை (தோராயமாக)** | **ஆதாரம்** |
|---|---|---|---|---|
| எழில் நகர் | மெட்ரோ ரயில் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த மழை நீர் வடிகால் திட்டம் | **செப் - 2009** | **200** | 2015[1] ஜூலை மாதம் டிரான்பரன்ட் சிடிஸ் நெட்வொர்க் மேற்கொண்ட வெளியேற்ற மேப்பிங் |
| எழில் நகர் | ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் திட்டம் | டிசம்பர் 2014 | 400 | 2015-ல் ஜூலை மாதம் டிரான்பரன்ட் சிடிஸ் நெட்வொர்க் மேற்கொண்ட வெளியேற்ற மேப்பிங் |
| எழில் நகர் | கூவம் நதி மீட்புத் திட்டம் | மே-15 | 200 | 2015, ஜூலை மாதம் டிரான்பரன்ட் சிடிஸ் நெட்வொர்க் மேற்கொண்ட வெளியேற்ற மேப்பிங் |
| | மெரினா லூப் சாலை திட்டம் | மே-15 | 1,300 | 2015, ஜூலை மாதம் டிரான்பரன்ட் சிடிஸ் நெட்வொர்க் மேற்கொண்ட வெளியேற்ற மேப்பிங் |
| எழில் நகர் | சென்னையில் நவ. 30 முதல் டிச. 7 வரை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் | ஜன-16 | 900 | http://www.newindianexpress.com/cities/chennai/More-Than-900-Slum-Dwellers-Get-New-Home/2016/01/05/article3212371.ece |

2015 அக்டோபர் மாதம் டிரான்ஸ்பரன்ட் சிடீஸ் நெட்வொர்க் அமைப்பு எழில் நகரில் நடத்திய உள்கட்டமைப்பு மற்றும் சேவைகள் தொடர்பான உண்மை கண்டறியும் முந்தைய ஆய்வு, எழில் நகரில் 1 முதல் 5-ம் வகுப்பு வரையிலான ஒரே ஒரு அரசு ஆரம்பப் பள்ளி உள்ளது என்றும் உயர்நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளி ஒன்றுகூட இல்லை என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் மற்றும் வகுப்பறை பற்றாக்குறை உள்ளதாகவும் இந்த

---

[1] ஜூலை மாதம், 2015-ல் டிரான்பிரன்ட் சிடீஸ் நெட்வொர்க்கின் வெளியேற்ற மேப்பிங் ஆய்வு, 2005 மற்றும் 2015 ஆண்டுகளுக்கு இடையே சென்னையில் நடைபெற்ற குடிசை அகற்று நடவடிக்கைகள் குறித்த தகவல்களை ஆர்வலர்கள் மற்றும் சமூக அமைப்புகளிடமிருந்து மறைத்துள்ளது என்று தெரிவிக்கிறது. Transparent Cities Network's eviction mapping study, conducted in July 2015 leveraged informally held information from activists and community based organisations to enumerate slum evictions in Chennai between 2005 and 2015.

ஆய்வு மேலும் கூறுகிறது. அதனால் ஒன்றாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பு குழந்தைகள் ஒரே வகுப்பறையில் ஒரே ஆசிரியரிடம் பாடம் கற்கிறார்கள். மேலும், இந்தப் பள்ளியில் கழிப்பறை மற்றும் குடிநீர் வசதிகள் கிடையாது. மேஜை நாற்காலிகள் இல்லாததால், பிள்ளைகள் தரையில் உட்காரவைக்கப்படுகிறார்கள்.

**வழிமுறை:**


2016 ஜனவரி மாதம் 19, 20, 21 ஆகிய தேதிகளில் எழில் நகர் மற்றும் சுனாமி நகருக்கு எங்களுடைய அமைப்பின் நான்கு ஆய்வாளர்கள் நேரில் சென்றனர். நேரம் மற்றும் ஆதாரங்களின் பற்றாகுறையால், எங்களுடைய மாதிரி உத்தியாக சவுகரியமான மாதிரி (Convenience Sampling) முறைகளை நாங்கள் பயன்படுத்தினோம். சுலபமாக அணுகக்கூடியவர்களைத் தேர்ந்தெடுத்துக் கேள்விகள் கேட்பதும் இதில் ஒன்று.

ஒரு குழந்தையின் கல்வியில் பாதிப்பு ஏற்படுத்தியதா இல்லையா என்பதைக் கண்டறிவதற்காக இந்த சர்வே வடிவமைக்கப்பட்டது. 75 குடும்பங்களைச் சேர்ந்த 147 பேரிடம் நாங்கள் இந்த சர்வே நடத்தினோம். எங்கள் சர்வே மாதிரியில் இடம்பெற்ற 147 பேரில் 82% பெற்றோர். பெற்றோர் இல்லாதபட்சத்தில் அந்தக் குடும்பத்தில் குழந்தையின் கல்வி குறித்து அறிந்துள்ள மற்றொரு குடும்ப உறுப்பினரிடம் பேசினோம். ஆறு சந்தர்ப்பங்களில் ஒரு குழந்தையுடன் பேசினோம். அந்தக் குழந்தையிடம் நாங்கள் அவனுடைய / அவளுடைய மற்றும் உடன் பிறந்தவர்களின் கல்வி நிலவரம் குறித்து கேட்டோம்.

147 குழந்தைகள் மாதிரிகளில் 58 பேர் சராசரியாக 10 வயதுடைய சிறுவர்கள், 51 பேர் சராசரியாக 9 வயதுடைய சிறுமிகள். பாலின அடிப்படையில் பிரிக்கும் கேள்வியை நாங்கள் முதல் நாள் சர்வேவுக்குப் பின்னரே அறிமுகப்படுத்தினோம் என்பதால், 38 குழந்தைகளின் பாலினம் குறித்த விவரங்களை நாங்கள் சேகரிக்கவில்லை.

வயது அடிப்படையில் பிரித்ததால் மாதிரியின் பகிர்வு ஒன்றோடொன்று கலந்திருக்கும். வயது அடிப்படையில் மாதிரி எடுக்கப்பட்ட பெரிய குழு மொத்த மாதிரியில் வெறும் 27% மட்டுமே. இவர்கள் 8 முதல் 10 வயதுக்கு இடைபட்டவர்களின் குழு.

**வயது வாரியாகப் பிரிக்கப்பட்ட மாதிரி**




எழில் நகரில் நாங்கள் பேசிய 75 குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எக்மோர், கிரீன்வேஸ் சாலை, இந்திரா நகர், ஜாஃபர்கான் பேட்டை, கண்ணகி நகர், கெல்லீஸ், கொட்டிவாக்கம், மண்ணடி, நந்தம்பாக்கம், பாரீஸ், சைதாப்பேட்டை, சாந்தோம், தேனாம்பேட்டை, வேளச்சேரி, வியாசர்பாடி மற்றும் வால்டாக்ஸ் சாலை ஆகிய முக்கியமான இடங்களிலிருந்து இங்கு குடியேற்றப்பட்டவர்கள்.

பெரும்பாலான குடும்பங்கள் (54) நிர்வாகப் பிரிவான ராயபுரம் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டவை. மேற்கில் அண்ணா நகர் மற்றும் நகரின் தென் பகுதியில் ஆலந்தூர் மற்றும் பெருங்குடி ஆகியவை குறைவாக வெளியேற்றம் நிகழ்ந்த பகுதிகள். கலந்துரையாடல் நடைபெற்றதைக் குறிக்கும் வரைபடத்தில் மறு குடியமர்வு நடைபெறுவதற்கு முன்பு குடும்பங்கள் வசித்து வந்த பகுதிகளை இங்கே காணலாம். நாங்கள் பேசிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எழில்நகருக்கு 2-3 நாட்கள் மற்றும் 1-24 மாதங்களுக்கு இடையே வந்து குடியேறியவர்கள்.

எங்களுடைய ஆய்வில் பல வரையறைகள் இருந்தன. முதலாவதாக, நாங்கள் சவுகரிய மாதிரியைப் பயன்படுத்தியதால், எழில் நகர் மற்றும் சுனாமி நகரில் வசிக்கும் மக்கள் எண்ணிக்கையை இந்த மாதிரி பிரதிநிதித்துவப்படுத்துவதாக இல்லை. அசல் குடியிருப்பு பிளாக் அல்லது பகுதிவாரியாக பதில் கூறுபவர்களை துணை-குழுக்களாகப் பிரிப்பதை உள்ளடக்கிய ஒரு முறையான மாதிரி உத்தியில் மறு குடியமர்வு காலனிகளில் நடத்தப்படும் ஆய்வில் கிடைக்கும் புள்ளி விவரங்களை சுலபமாக அனைத்து மக்களையும் உள்ளடக்கிவிட முடியும். இரண்டாவதாக, நாங்கள் ஆய்வு மேற்கொண்ட சமயத்தில்தான் எழில் நகர் மற்றும் சுனாமி நகரில் மக்கள் குடியேறி வந்தனர். நாங்கள் பேசிய நிறைய குடும்பங்கள் அப்போதுதான் வீடு மாறி வந்திருந்தனர். தங்கள் குழந்தைகளின் கல்வி பற்றி நினைத்துப் பார்க்கவில்லை.

மூன்றாவதாக, எங்களது பெரும்பாலான பேட்டிகள் பெற்றோரிடம் எடுக்கப்பட்டவை. மறு குடியமர்வு உளவியல் பாதிப்புகளைக் குறித்து சொல்லக்கூடிய ஆசிரியர்கள், தங்களுடைய கல்வி கற்கும் செயல்பாட்டை இது பாதித்துள்ளதா என்பதைக் குறித்து சொல்லக்கூடிய மாணவர்கள் இல்லை என்பதால் எங்களது ஆய்வில் முழுமையான பிரதிநிதித்துவம் இல்லை. இறுதியாக, அந்தப் பகுதிகளில் இருக்கும் பள்ளிகளில் நாங்கள் சர்வே நடத்தவில்லை. காரணம், மாநில அரசின் கல்வித் துறையிடமிருந்து குறிப்பிட்ட குறிப்புகள் இல்லாமல் எங்களிடம் பேச பல ஆசிரியர்கள் மறுத்துவிட்டனர். இதனால் நாங்கள் உள்கட்டமைப்புக்கான போதுமான வசதிகள், மறு குடியமர்வுக்கு முந்தைய கல்வித் தரம் ஆகியவற்றைக் குறித்த தகவல்களைப் பெற முடியவில்லை. பள்ளியில் சர்வே நடத்த முடிந்திருந்தால், அரசு குடியிருப்புகளுக்கு வழங்கியுள்ள வசதிகளை எங்களால் ஆராய்ந்திருக்க முடியும்.

**கண்டறிந்தவை:**

சுருக்கமான புள்ளிவிவரங்கள்

**மொத்தம் ஆய்வு செய்யப்பட்ட 147 குழந்தைகளில்,**

- குடிசைப் பகுதிகளில் 135 பேர் பள்ளிக்குச் சென்றவர்கள், 12 பேர் பள்ளிக்குச் செல்லவில்லை.
- குடிசைப் பகுதிகளில் பள்ளி செல்லாத 12 குழந்தைகளில் 11 குழந்தைகள் அவர்களின் பெற்றோர் கூற்றுப்படி பள்ளி செல்லும் வயதை எட்டாதவர்கள். 1 குழந்தை படிப்பறிவில்லாதது, குடிசைப் பகுதியில் இருந்தபோதும் மறு குடியமர்வுக்குப் பின்னரும் பள்ளி செல்லவில்லை என்பது கண்டறியப்பட்டது.
- பள்ளிச் செல்லும் வயதை எட்டாத 11 குழந்தைகளில் 8 பேர் தற்போது எழில் நகர் மற்றும் சுனாமி நகர் பள்ளிகளுக்குச் செல்கின்றனர்.

- எழில் நகரிலும் சுனாமி நகரிலும் 123 குழந்தைகள் பள்ளி சென்றுள்ளனர், 22 பேர் பள்ளி சென்றதில்லை. மற்ற 2 குழந்தைகளின் கல்வி நிலவரம் குறித்து எங்களுக்கு தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

| | பள்ளி செல்பவர்கள் | பள்ளி செல்லாதவர்கள் | தகவல் இல்லை | சர்வே செய்யப்பட்ட மொத்த குழந்தைகள் |
|---|---|---|---|---|
| குடிசைப் பகுதிகளில் | 135 | 12 | 0 | 147 |
| எழில் நகர் மற்றும் பெரும்பாக்கம் | 123 | 22 | 2 | 147 |

## கல்வி நிலை

**குடிசைப் பகுதிகளில் பள்ளி செல்லும் 135 குழந்தைகளில் 15% (20/135)** மறு குடியமர்வு **பகுதிகளுக்கு மாறி வந்த பிறகு பள்ளி செல்வதை நிறுத்திவிட்டனர்.**

பள்ளிக்குச் செல்வதை நிறுத்திவிட்ட 20 குழந்தைகளில் 70% (14/20) எதிர்காலத்தில் பள்ளியில் சேர முடிவெடுத்துள்ளனர். இதில் 12 குழந்தைகள், இந்த சர்வே எடுப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு தங்கள் குடும்பம் இந்த காலனிக்கு இடம் மாறி வந்ததால் பள்ளிக்குச் செல்லாமல் இருப்பவர்கள். முதலில் ஜாஃபர்கான் பேட்டையில் படித்துக்கொண்டிருந்த மீதி இரண்டு குழந்தைகள் இந்த சர்வே எடுக்கப்படுவதற்கு 9 மாதங்களுக்கு முன்பாக இங்கு குடியேறியவர்கள். ஏன் பள்ளியில் சேர்க்கப்படவில்லை என்பது இவர்களுக்குத் தெரியவில்லை.

புதுப்பேட்டையிலிருந்து 20 குழந்தைகளில் 2 பேர், இந்தக் காலனிக்கு 7 வருடங்களுக்கு முன்பே வந்துவிட்டனர். ஆனால் ஒரு தீ விபத்தில் தங்கள் எல்லா ஆவணங்களையும் இழந்துவிட்டனர். இந்த ஆவணங்கள் இல்லாமல் எந்தப் பள்ளியிலும் இவர்களை சேர்க்க முடியவில்லை என்று அம்மா கூறியதாக இவர்கள் கூறுகிறார்கள்.

**இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுவதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு மறுகுடியமர்வு செய்யப்பட்ட ஏறக்குறைய நான்கில் ஒரு பகுதி குழந்தைகள் (8/38) பள்ளிக்குச் செல்லவில்லை.** இந்தக் குழந்தைகள் 2015-ம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாத வெள்ளத்தில் கடுமையாக பாதிக்கப்பட்ட சைதாப்பேட்டை பகுதியிலிருந்து வந்தவர்கள். இப்போதுதான் இந்தப் பகுதிக்கு வந்திருப்பதாலும் பக்கத்தில் உள்ள பள்ளிகள் மற்றும் அவற்றின் சேர்க்கை விதிமுறைகள் குறித்த தகவல்கள் கிடைக்கவில்லை என்பதாலும் இவர்கள் பள்ளி செல்லவில்லை.

## கல்வி தொடர்சி


**எழில் நகரில் ஒரே ஒரு அரசாங்க ஆரம்பப் பள்ளிதான் உள்ளது. சுனாமி நகரில் பள்ளிகளே இல்லை. 2015 நவம்பரில் எழிநகர் அரசாங்கப் பள்ளியில் 6 முதல் 8-ம் வகுப்பு வரை சேர்க்கப்பட்டது.**

**தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் வெள்ளப் பெருக்கையடுத்து குழந்தைகளைப் பள்ளியில் சேர்ப்பதற்காக பல பதிவு முகாம்களை நடத்தினாலும் அவற்றைக் குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது என்று எங்களுக்கு அளித்த பேட்டியில் பல பெற்றோர்கள் கூறினார்கள்.**

**குடிசைப் பகுதி மற்றும் மறு குடியமர்வு பகுதிகளைச் சேர்ந்த 115 குழந்தைகளில் பாதிக்கும் மேற்பட்டோர் (62%, 60/115) எழில் நகர் மற்றும் சுனாமி நகர் பகுதிகளுக்கு மறு குடியமர்வு செய்யப்படுவதற்கு முன்பாக ஏற்கெனவே தாங்கள் போய்க்கொண்டிருந்த பள்ளிகளுக்கே செல்கின்றனர்.** மறு குடியமர்வு பகுதிகளில் உள்ள 123 பள்ளி செல்லும் குழந்தைகளில் ஏற்கெனவே பள்ளி செல்லாத 8 குழந்தைகள் மறு குடியமர்வுப் பகுதிகளுக்கு வந்த பின் பள்ளிச் செல்லத் தொடங்கியுள்ளனர். குடிசைப் பகுதிகள் மற்றும் மறு குடியமர்வு குடியிருப்புகளைச் சேர்ந்த 115 குழந்தைகள் மட்டுமே பள்ளி செல்கின்றனர்.

**உண்மையில், 9 முதல் 12-ம் வகுப்பில் படிக்கும் மாணவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் (55%; 10/18) மறு குடியமர்வு செய்யப்படுவதற்கு முன்பாக சென்ற பள்ளிகளுக்கே செல்கின்றனர்.**

கண்ணகி நகரில் ஒரே ஒரு அரசு பள்ளிக்கூடம்தான் உள்ளது. இங்கு 9 முதல் 12-ம் வகுப்பு வரையில் உள்ளது. ஏற்கெனவே போய்க்கொண்டிருந்த பள்ளிகளிலேயே தங்கள் குழந்தைகள் படிக்க வேண்டும் என்று பல்வேறு காரணங்களுக்காகப் பெற்றோர் விரும்புகின்றனர். முதலாவது காரணம், தங்கள் குழந்தைகள் தற்போது பொதுத் தேர்வுகளை சந்திக்க இருப்பதால், பிள்ளைகளைப் பள்ளியிலிருந்து பாதியில் நிறுத்துவதை அவர்கள் விரும்பவில்லை. பாதியில் வேறு பள்ளிக்குச் செல்வதால் பிள்ளைகளின் படிப்பு கெட்டுவிடும் என்று நினைக்கிறார்கள். ஒரு பெண்ணின் அம்மா தன் மகளைப் பெண்கள் பள்ளியில் சேர்ப்பதையே விரும்புவதாகவும் இங்கு பெண்கள் பள்ளி இல்லாததால் மீண்டும் அவள் ஏற்கெனவே போய்க்கொண்டிருந்த குடிசைப் பகுதி பள்ளிக்கே அனுப்பவதாகவும் சொன்னார்.




**மறு குடியமர்வு நடைபெறுவதற்கு முன்பாக படித்துக்கொண்டிருந்த பள்ளிக்கே மீண்டும் சென்று கொண்டிருக்கும் குழந்தைகளின் விகிதம்**

பள்ளி வகை

**நாங்கள் ஆய்வு நடத்திய  மாதிரிகளில்147, 123 பேர் மறு குடியமர்வு குடியிருப்பில் பள்ளி சென்றனர். பள்ளி செல்லும் இந்தக் குழந்தைகளில் 33% பேர் எழில் நகர் மற்றும் கண்ணகி நகர் பகுதிகளில் அரசாங்கப் பள்ளிகளில் பயில்கின்றனர்.**

இந்தப் பள்ளிகளில் குழந்தைகளை சேர்ப்பதில் எந்த சிரமும் இல்லை என்று பெற்றோர் கூறினர். எழில் நகர் மற்றும் சுனாமி நகர்களுக்கு 2016 ஜனவரி மாதம் இடம் பெயர்ந்து வந்த இரண்டு பெற்றோர் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஏற்பாடு செய்த முகாம்கள் மூலமாக தங்கள் குழந்தைகளை பள்ளியில் சேர்த்தனர் என்று கூறினர்.

ஆனால் இந்தப் பெற்றோர் பள்ளி உள்கட்டமைப்பு மற்றும் கற்பித்தல் தரம் குறித்து புகார் கூறினார்கள். இந்தப் பள்ளிகளில் கழிப்பறை மற்றும் குடிநீர் குறித்து குறை கூறினார்கள். எழில் நகர் அரசுப் பள்ளியில் மீண்டும் மீண்டும் புகார் அளித்த பிறகே கழிப்பறை மற்றும்

குடிநீர் வசதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டதாக இதற்கு முன் சென்ட்ரல் ரயில் நிலையம் அருகில் வால்டாக்ஸ் சாலையில் குடியிருந்த ஒரு குழந்தையின் அம்மா கூறினார். எழில் நகர் பள்ளிக்கூடத்தில் கழிப்பறை மோசமான முறையில் பராமதிக்கப்படுவதால் அதைப் பயன்படுத்த முடியாமல் தன் குழந்தை கழிப்பறையைப் பயன்படுத்துவதற்காகவே பள்ளியிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வந்ததாக தேனாம்பேட்டையில் வசித்து வந்த ஒரு அம்மா கூறினார்.

ஒருசில பெற்றோர் கண்ணகி நகர் மற்றும் எழில் நகரில் உள்ள பள்ளிகளின் பாட போதனையின் தரம் பற்றி புகார் கூறினார்கள். புதுப்பேட்டையிலிருந்து இங்கு குடியேறிய ஒரு தாய், கண்ணகி நகர் பள்ளியில் கல்வி நிலை குறித்து ஆசிரியர் சரியாக கவனம் செலுத்தாததால் என்பதால் தன் மகனைப் பள்ளியிலிருந்து கூட்டி வந்து விட்டதாகச் சொன்னார். வால்ட்டாக்ஸ் சாலையிலிருந்து வந்துள்ள இன்னொரு தாய், ஆசிரியர் பள்ளிக்கு தினமும் வராமல் இருப்பது இங்கு சர்வ சாதாரணமான விஷயம் என்று சொல்கிறார்.

**மறு குடியமர்வு குடியிருப்பில் உள்ள பள்ளி செல்லும் 123 குழந்தைகளில் 7 பேர் கண்ணகி நகர் மற்றும் எழில் நகர் அருகே உள்ள தனியார் பள்ளிக்குச் சென்று வருகின்றனர்.** தனியார் பள்ளிகளில் கல்வித் தரம் சிறப்பாக இருப்பதாக இந்தக் குழந்தைகளின் பெற்றோர் கூறுகின்றனர். சாந்தோமிலிருந்து இங்கு குடிபெயர்ந்துள்ள ஒருவர், தனியார் பள்ளியில் தன் குழந்தையை சேர்த்திருப்பதை ஒப்புக்கொண்டார். தனியார் பள்ளிகளில் நல்ல முறையில் பயிற்சி அளிக்கப்படுவதால் அரசுப் பள்ளிகளை விடுத்து தனியார் பள்ளிகளில் குழந்தைகளை சேர்க்க முன்வருவதாகவும், அங்கு ஓரளவுக்கு தூய்மையாக இருப்பதாகவும் குழந்தைகள் அனைவரும் சீருடை அணிய வேண்டியிருப்பதாகவும் அவர் கூறினார். இன்னும் சொல்லப்போனால் தங்கள் குழந்தைகளை இதுவரை பள்ளியில் சேர்க்காமல் இருக்கும் பெற்றோர்கூட அரசுப் பள்ளிகளை விடுத்து தனியார் பள்ளிகளில்தான் சேர்க்க விரும்புகின்றனர். சைதாப்பேட்டையிலிருந்து குடியேறியுள்ள ஒருவர் தனது குழந்தையை இன்னும் பள்ளியில் சேர்க்கவில்லை. ‘தனியார் பள்ளியில் சேர்ப்பதற்கு எனக்கு வசதி இல்லை. ஆனால், தனியார் பள்ளிகளில்தான் தரமான கல்வி கிடைப்பதாக நான் நினைக்கிறேன்.’ என்று கூறியதை உதாரணமாகக் கூறலாம்.

## போக்குவரத்து வசதி


**மறு குடியமர்வுக்கு முன்னர், பள்ளி செல்லும் 135 குழந்தைகளில் 62% பேர் (84/135) பள்ளிக்கு நடந்து சென்றனர்.** தங்களது குடிசைப் பகுதிகளிலிருந்து இந்தப் பள்ளிக்கூடங்கள் கால்நடையாக செல்லும் தூரத்தில்தான் இருந்தன என்று இந்தக் குழந்தைகளின் பெற்றோர் சொன்னார்கள். 19% குழந்தைகள் மட்டுமே (26.135) பள்ளி வாகனங்கள் அல்லது அரசுப் பேருந்துகளில் சென்றனர்.

**மறு குடியமர்வு குடியிருப்பில் வசிக்கும், பள்ளி செல்லும் 123 குழந்தைகளில் 43% பேர் (53/123) பேருந்து மூலமாகவும் 41% பேர் (51/123) நடந்தும் செல்கின்றனர்.** தாங்கள் ஏற்கெனவே படித்துக்கொண்டிருந்த குடிசைப் பகுதிகளில் உள்ள பள்ளிகளுக்குச் சென்று வரும் குழந்தைகள் ஒரு நாளின் பெரும்பகுதியை (குறைந்தபட்சம் 4 மணி நேரம்) பள்ளி சென்று வருவதற்கே செலவழிக்கின்றனர் என்பது பெற்றோரிடம் பேசியபோது தெரியவந்தது. குழந்தைகள் கூட்டம் அதிகமான பேருந்துகளில் பயணம் செய்ய வேண்டியுள்ளது என்றும் அவர்கள் கூறுகிறார்கள். அங்கே செல்வதற்கு பல டீலக்ஸ் மற்றும் எக்ஸ்பிரஸ் பேருந்துகள் உள்ளன என்றாலும் அவற்றில் செல்வதற்கு தங்களுக்கு வசதி இல்லை என்றும் கூறினர்.

**ஏற்கெனவே கால்நடையாகப் பள்ளி சென்ற, எழில்நகர் மற்றும் சுனாமி நகரில் குடியேறியுள்ள 33 குழந்தைகள் இப்போது பேருந்துகள் அல்லது வேன்களில் பள்ளி செல்கிறார்கள். இது, மறு குடியமர்வுக் குடியிருப்புகளில் பள்ளிக் கல்வி பெறுவது மிகவும் கடினமாகவும் செலவு பிடிப்பதாகவும் இருப்பதையே காட்டுகிறது.**

## வரைபடம்

## போக்குவரத்து



## பரிந்துரைகள்:

### கல்வியின் நிலை

- மறு குடியமர்வு குடியிருப்புகளில் பள்ளிகளில் உள்கட்டமைப்பு குறைபாடு குறித்து ஆய்வுகள் நடத்தப்படாத நிலையில் இந்த மறு குடியமர்வு குடியிருப்புகளில் கல்வி வசதிகள் நிலவரம் குறித்து மதிப்பீடு செய்வதற்காக அரசு, கல்வியாளர்கள், ஆய்வாளர்கள், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் சமூக உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குழுவை ஏற்படுத்த வேண்டும்.
- கல்வி பதிவேடு முகாம்கள், சேர்க்கை நடைமுறைகள் மற்றும் பள்ளிகளில் உள்ள வசதிகள் குறித்த தகவல்களை எழில் நகர் மற்றும் சுனாமி நகரின் சுற்று வட்டாரங்களில் உள்ள அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் தெரிவிக்க தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மற்றும் சென்னை மாநகராட்சி ஏற்பாடுகளை செய்ய வேண்டும். இதனால் குடும்பங்கள் தங்கள் குழந்தையின் கல்வி குறித்த தெளிவான, அறிவார்ந்த அறிமுடிவுகளை முன்கூட்டியே எடுக்க முடியும்.

### கல்வியைத் தொடர்வது

- இந்தப் பகுதியில் அரசு மேலும் கூடுதலான ஆரம்ப, உயர் நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிகளைத் தொடங்க வேண்டும். அப்போதுதான் குழந்தைகள் மறு குடியமர்வில் தங்கள் கல்வியைத் தொடர முடியும். 300 மக்களுக்கு ஒரு தொடக்கப்பள்ளியும் 500 மக்களுக்கு ஒரு நடுநிலைப்பள்ளியும் இருக்க வேண்டும் என விதிமுறைகள் வகுக்கப்பட்டிருந்தாலும் எழில் நகரில் ஒரே ஒரு நடுநிலைப் பள்ளி மட்டுமே செயல்பட்டுவருகிறது. எழில் நகர் மற்றும் சுனாமி நகர் பகுதியில் வசிக்கும் 2650 பேருக்கு இந்த அளவுக்குத்தான் கல்வி நிலவர வசதி உள்ளது. சுனாமி நகரில் எந்த ஒரு பள்ளிக்கூடமும் இல்லை.

### போக்குவரத்து

- மறு குடியமர்வு குடியிருப்புகளில் போதுமான கல்வி வசதிகளுக்கு ஏற்பாடு செய்யப்படும் வரையில் காலையிலும் மாலையிலும் குழந்தைகளுக்கான சிறப்புப் பேருந்துகள் உள்ளிட்ட, தேவைப்படும் போக்குவரத்து வசதியை அரசு ஏற்படுத்தித் தர வேண்டும்.

## இணைப்பு 1: மறுகுடியமர்வால் கல்வியில் ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பான தகவல் தொகுப்பு குறித்த சீராய்வு.

| **வெளியீடு தலைப்பு** | **வெளியீடு ஆண்டு** | **கல்வித் தகவல்** | **இணைப்பு** |
|---|---|---|---|
| கட்டாயமாக விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட அவலம், சென்னை (இந்தியா) கண்ணகி நகரில் மறு குடியமர்த்தலின் சீரழிவுகள், ஹெச்.எல்.ஆர்.என். மற்றும் ஐ.ஆர்.சி.டி.யு.சி. நடத்திய ஆய்வு | 2014 | 6-14 வயது வரையிலான குழந்தைகளில் 13% பேர் பள்ளி செல்லவில்லை. 15-18 வயது வரையிலான குழந்தைகளில் 35% பேர் பள்ளியிலிருந்து பாதியில் நின்றுவிட்டனர். | http://www.hic-sarp.org/documents/Kannagi_Nagar_Report_2.pdf |
| கட்டாயமாக விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட அவலம், சென்னை (இந்தியா) கண்ணகி நகரில் மறு குடியமர்த்தலின் சீரழிவுகள், ஹெச்.எல்.ஆர்.என். மற்றும் ஐ.ஆர்.சி.டி.யு.சி. நடத்திய ஆய்வு | 2014 | 15-18 வயது குழந்தைகளில் 35% பேர் பள்ளியிலிருந்து பாதியில் நின்றுவிடுவதற்கு மிக முக்கிய காரணம், மறு குடியமர்த்தல். இந்த ஆய்வின்படி 42% குழந்தைகள் பள்ளி செல்வதற்காக நீண்ட தூரம் பேருந்தில் பயணம் செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றனர். இந்தப் பள்ளிகளில் நகரில் அவர்கள் வசித்து வந்த பகுதிக்கு அருகில் உள்ளன. கண்ணகி நகர் குழந்தைகளுக்கு தரமான கல்வியை உறுதிப்படுத்துவதற்கான நடைமுறைகளை விரைவுபடுத்துவதற்காக பல்வேறு துறைகளுக்குத் தேவைப்படும் பரிந்துரைகள் இதே அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. | http://www.hic-sarp.org/documents/Kannagi_Nagar_Report_2.pdf |

| | | | |
|---|---|---|---|
| கட்டாய வெளியேற்றம் மற்றும் சென்னை குடிசை வாழ் மக்களின் மறு வாழ்வு குறித்த பி.யு.சி.எல். உண்மை அறிவும் குழுவின் அறிக்கை. | 2011 | "கல்வியாண்டின் நடுவில் குடியிருப்பிலிருந்து வெளியேற்றப்படுவதால் குழந்தைகள் பள்ளியிலிருந்து பாதியிலேயே நின்றுவிடுகின்றனர்.<br><br>குடும்பத்தில் உள்ள மற்றவர்கள் வேலைக்குச் செல்ல ஏதுவாக தண்ணீரை எடுத்து வரும் வேலையை சில குடும்பங்கள் சிறுமிகளை மேற்கொள்ள வைக்கின்றன. எல்லா குடும்பங்களிலும் இப்படி இல்லை.<br><br>மறு குடியமர்வு பகுதியில் போதுமான வசதிகள் இல்லாததும் குழந்தைகள் பள்ளியிலிருந்து பாதியிலிருந்து நின்று விடுவதற்கும் ஏற்கெனவே வசித்து வந்தப் பகுதியில் உள்ள பள்ளிகளுக்கு மீண்டும் செல்வதற்கும் ஒரு காரணமாகும். | http://www.ids-uva.nl/wordpress/wp-content/uploads/2011/08/7-PUCL-Report.pdf |
| சென்னையில் வெளியேற்றம், வீட்டு வசதி மற்றும் வாழ்வாதாரம். ஆய்வு நடத்தியவர் வி. ஃபிரான்சிஸ் அடைக்கலம் | 2010 | உரிய அறிவிப்பு கொடுக்காமல் வெளியேற்றப்பட்டதால் பல குழந்தைகள் பள்ளியிலிருந்து பாதியில் நின்று விட்டனர் என்பதை இந்த அறிக்கை வெளிப்படுத்துகிறது. | http://www.mcrg.ac.in/rw%20files/RW36/2.Francis.pdf |

| | | | |
|---|---|---|---|
| வாய்ஸ் ஃபார் சேஞ்ச் அமைப்பின் நான்காவது வெளியீடு, பிராக்சிஸ் பப்ளிகேஷனின் செய்தி மடல் | 2015 | போக்குவரத்து நெரிசலான நேரங்களில் பள்ளி செல்ல உதவியாக சிறப்பு பேருந்து சேவை தேவை என கண்ணகி நகர் குழந்தைகள் கூறினர். அவர்களுடைய மன அழுத்தம் குறைய இது உதவியாக இருக்கும். | http://www.praxisindia.org/user_praxis/file/Uploads%20Studies/Voice%20for%20Change%20Urban%20Poor%20Children%20Redefining%20Safe%20Spaces.pdf |